பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 22 வியாழக்கிழமை 04.04.2024 கதிர் 149

## எந்தவொரு விவாதத்திற்கும் தாயாராகவே இருக்கிறேன்

### முல்லைத்தீவில் சஜித் நேற்று அறிவிப்பு

எந்தவொருவிவாதத்திற்கும் தான் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின்கீழ்,140ஆவது கட்டமாக10இலட்சம்ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள்,முல்லைத்தீவு, முத்துஜயன்கட்டு, இடதுகரை அ.த.க பாடசாலைக்கு வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்அங்குமேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பிரச்சினைகள்குறித்துவிவாதம் தேவைஎன்றுசமூகத்தில் பேசப்படுகிறது. இத்தகையதொரு விவாதம் நடக்க வேண்டும் என்பதை தான் ஏற்றுக் கொள்கிறேன். விவாதங்களை நடத்துவது ஜனநாயக சமூகத்தின் உயர் பண்பு என்பதால் எந்த விவாதத்திற்கும் தயார்.

பொருளாதாரம், சமூகம், அரசியல், சர்வதேசம் என எந்த ஒருதலைப்பிலும் ☞2

## தற்போதைய பொருளாதாரத் திட்டத்தில் கடுகளவு மாற்றம் வந்தாலும் பேரழிவுதான்

### ஊடகத்துறை அமைச்சர் பந்துல கருத்து

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத்திட்டத்தில்கடுகளவு மாற்றம் செய்யப்பட்டாலும் நாடு மீண்டும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படும். அத்தோடு நாட்டின் எதிர்காலமும் கேள்விக்குரியாகிவிடும் என்றுபோக்குவரத்துமற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறைஅமைச்சர் ☞8

## போட்டித் தன்மையுள்ள முதலீட்டு வாய்ப்பை ஏற்படுத்த நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாட்டிற்கு உகந்த போட்டித்தன்மையுள்ள முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்தி வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகஜனாதிபதிரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதிஅலுவலகத்தில் இடம்பெற்ற முதலீட்டுச் சபையின்விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதலீட்டுச் சபையின் 45வது ஆண்டு ☞2

## இனி அது ரகசியம் அல்ல!

தெற்கு அரசியல் களத்தில் இப்போது பரபரப்பான பேச்சு ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்கவுக்கும் இடையில் நேரடி விவாதம் ஒன்று நடக்குமா இல்லையா என்பதுதான். இருவரும் விவாதத்திற்குத் தயார் என்றால் அந்த விவாதத்தை நடத்தி, அதை நேரடியாக மக்களுக்கு ஒளிபரப்பத் தாமும் தயார் என்று ஹிரு மற்றும் அடதெரண சிங்களத் தொலைக்காட்சிகள் தயாராக உள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரதான் இதனைத் தொடக்கி வைத்தவர். நாட்டின் பொருளாதார நிலை தொடர்பாக தமது கட்சி பொருளாதார வல்லுநர்களுடன் ஜேவிபியின் பொருளாதாரச் சபையினர் விவாதம் நடத்தத் தயாரா என்று முதலில் சீண்டியவர் அவர்தான். செய்தியாளர்கள் இந்தக் கேள்வியை ஜேவிபியின் ஹந்துன்நெத்தியிடம் கேட்டபோது, அப்படிபொருளாதாரச்சபையெல்லாம் விவாதிக்கவேண்டியதில்லை ☞2

## நீதிமன்றில் வாக்குமூலம் வழங்க மைத்திரி மறுப்பு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இன்றையதினம் வாக்குமூலம் அளிக்கப்போவதில்லை என்று மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரமவிற்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

தனது சட்டத்தரணி சந்தீப்த சூரியாரச்சியின் ஊடாக நகர்த்தல் பத்திரமொன்றைத் தாக்கல் செய்து மைத்திரிபால சிறிசேன மேற்கண்ட அறிவிப்;பை வெளியிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், தமது தரப்பு சேவைபெறுநர் சம்பவம் தொடர்பில் விரிவான வாக்குமூலத்தை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வழங்கியுள்ளதாக, அவரது சட்டத்தரணி அனுஜ ப்ரேமரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நீதிமன்றத்தில் முன்னிலையாகிமீண்டும்வாக்குமூலம் வழங்க இயலாது என அவர் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த மாளிகாகந்த நீதவான், ஏற்கனவேஅறிவிக்கப்பட்டமைக்கு ☞2

# மாணவர்களின் 3 போராட்டங்கள் நேற்று தாக்குதல் நடத்தி கலைப்பு

### கண்ணீர் புகைக் குண்டு வீச்சு தாராளம்
### நீர்த்தாரைத் தாக்குதலும் ஏராளம்



பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் முன்னெடுத்த எதிர்ப்புநடவடிக்கைகளைகலைப்பதற்குமூன்றுவெவ்வேறுஇடங்களில் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சையும் நீர்த் தாரைத் தாக்குதலையும் மேற்கொண்டனர். ☞2

## இரு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவதில் ஆளும் தரப்பினர் தீவிரம்

### உதய கம்பன்பில எம்.பி. எதிர்வுகூறல்

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நேரத்தில்நடத்துவதற்கு ஆளும் தரப்புக்குள் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானஉதய கம்மன்பிலதெரிவித்தார்.

கொழும்பில்நேற்று செய்தியாளர்களிடம் பெசுகையில் நடத்திய ஊடகவியலாளர்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தற்போதைய ஜனாதிபதி பதவியைதொடர்ச்சியான தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக அவர்முதலில்ஜனாதிபதி தேர்தலைநடத்துவதற்கு முயற்சிக்கின்றார். இல்லையென்றால் தேர்தலை நடத்தாது தற்போதைய பதவியை நீட்டிப்பதற்கு முயற்சிக்கின்றார்.

அதேநேரம், ☞2

## ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் விவசாய நவீன மயமாக்கல் சபை

### நிறுவப்படும் என ரணில் அறிவிப்பு

விவசாயத் துறையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களைமறுசீரமைப்புச் செய்வதுடன் கண்காணிப்பதற்காக ஜனாதிபதி - பிரதமர் தலைமையில்விவசாய நவீன மயமாக்கல் சபையொன்றை நிறுவ உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

விவசாய நவீன மயமாக்கல் வேலைத் திட்டத்தில்அரசாங்கநிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கிலேயே புதியச் சபை நிறுவப்பட உள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விவசாய நவீன மயப்படுத்தல் வேலைத் திட்டம் தொடர்பிலான மீளாய்வுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி ☞8

## ஒரே நேரத்தில் இரு தேர்தல்களை நடத்த பெரமுன எம்.பி. முழு ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்தி அதன் மூலம் செலவுகளைக் குறைப்பதற்குத் தான் ஆதரவுஎன்றுபொதுஜன பெரமுனவின்அநுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

பொது ஜன பெரமுனவின் தலைமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டு உரையாற்றியபோது ஜனாதிபதி, பொதுத் தேர்தல்களை ஒன்றாக நடத்தவதற்கு ஆளும் தரப்பிற்குள் முனைப்புக் காட்டப்படுகின்றதா என்பது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலையும், பொதுத்தேர்தலையும் ஒரேதினத்தில் நடத்துவதற்கு நான் ஆதரவளிக்கின்றேன். இதுபற்றி சபாநாயகரும் கோரிக்கை விடுத்துள்ளார். இதன்மூலமாக தேர்தல்களுக்கான செலவீனங்கள் குறைவடையும்.

அதேநேரம், ☞2

## விசா கட்டண விலக்கு மேலும் 1 மாதம் நீடிப்பு

7 நாடுகளிலிருந்து இலங்கைக்குவரும் சுற்றுலாப் பயணிகளுக்கான விசா கட்டண விலக்கு மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ☞2

## கொழும்பை வந்து சேர்ந்த முருகன், பயஸ், ஜெயாவிடம் புலனாய்வு அதிகாரிகள் 5 மணி நேரம் விசாரணை

கொழும்பை வந்தடைந்த முருகன் ரொபேர்ட் பயஸ் ஜெயக்குமார் மூவரையும் கொழும்பு விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுஅதிகாரிகள் ஐந்து மணிநேரம் விசாரணை செய்த பின்னர் விடுதலை செய்தனர்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் ☞8

## கிறிஸ்தவத் திருச்சபையினர் மைத்திரியை நம்ப தயாரில்லை

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நம்பத் தயாரில்லை என்று அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ தெரிவித்தார்.

கத்தோலிக்க திருச்சபைசார்பில்நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களுக்குக் காரணமானவர்களை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று வாரங்களுக்கு ☞2

## ஆசிரியத் தொழிலின் மரியாதையை பாதுகாக்க ஜனாதிபதி அறைகூவல்

அனைவரின் வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதில் பெற்றோரிடமிருந்து பெற்ற வழிகாட்டுதலைப் போன்றே ஆசிரியர்களின் வழிகாட்டுதலும் மிகவும் முக்கியமானது. அதனால்தான் ஆசிரியர் தொழில் உயர் தொழிலாகக் கருதப்படுகிறது. அந்த மரியாதையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

முதலில் முடிந்தால் சஜித் பிரேமதாஸவை எமது தலைவர் அனுரகுமார திஸநாயக்கவுடன் நேரில் மோதிப் பார்க்க (கருத்து மோதல்) சொல்லுங்க என்று வரிந்து கட்டினார்.

உடனடியாக வாய்ப்பை 'கப்'பெனப் பிடித்துக்கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி விவாதத்திற்குத் தான் தயார் என்று அறிவித்துவிட்டது. நளின் பண்டார நேற்று விடுத்த அறிக்கையில் ஹந்துன் நெத்தியின் அழைப்பைத்தான் ஏற்கிறார் என்றும் தமது தலைவரும் விவாதத்திற்குத் தயாராகவே இருக்கின்றார் என்றும் தெரிவித்தார். அதன் பின்னர் நேற்று முல்லைத்தீவிற்கு வந்திருந்த சஜித் பிரேமதாஸவும் எந்தவொரு விவாதத்திற்கும் தான் தயார் என்றும், விவாதங்கள் ஜனநாயகத்திற்கு ஆரோக்கியமானவை என்றும் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து அப்படிப்பட்ட ஒரு விவாதத்தை நடத்தி ஒளிபரப்புவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தரத் தாங்கள் தயார் என்று ஹிரு மற்றும் தெரண தொலைக்காட்சிகள் போட்டிபோடுகின்றன. அனுரகுமார விவாதத்திற்குத் தயார் என்றால் விரைவிலேயே அது நடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

அனுர இன்று யாழ்ப்பாணத்தில் இருப்பார். ஜேவிபியின் ஆசிரியர் சங்கமான ஆசிரியர் சேவைச் சங்கத்தின் வடமாகாண மாநா-டு யாழ்ப்பாணம் வலம்புரி சொகுசு விடுதியில் நடக்கின்றது. அதில் கலந்துகொள்வதறகாக வந்திருக்கும் அவர் விவாதம் குறித்து இன்று ஏதாவது அறிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பயணத்தின்போது அனுரகுமார தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனையும் சந்தித்துப் பேசவுள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் -முன்னணி வேட்பாளராகக் கருதப்படும் அனுர, தமிழ் மக்களின் ஆதரவைத் தனக்குப் பெறும் வகையில் தமிழ்த் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு முற்படுகின்றார். எனினும் அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து எந்தவொரு விரிவான கலந்துரையாடலிலும் ஈடுபடுவார் என்கிற தகவல்கள் இல்லை. மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஐதேக மற்றும் சுதந்திரக் கட்சி ஜனாதிபதிகளால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ள நிலையில் தமகொரு வாய்ப்பை அவர்கள் வழங்கிப்பார்க்கவேண்டும் என்பதுதான் அவரது நிலைப்பாடாக முன்வைக்கப்படும் என்று தெரிகிறது.

அனுரவுக்கும் சுமந்திரனுக்கும் ஏற்கனவே ஒரு நல்ல புரிந்துணர்வு இருக்கின்றது. இனப் பிரச்சினை விடயத்தில் ஏற்கனவே பயணித்த பாதைகளைத் தவிர்த்து புதிய பாதைகளைக் கண்டறிய முடியுமா என்பதில் இருக்குக்கும் இடையில் கருத்தொற்றுமையும் உண்டு. தமிழ் மக்களின் பிரச்சினை விடயத்தில் ஜேவிபியிடம் அணுகுமுறை மாற்றம் இருப்பதாக சுமந்திரன் கடந்த காலங்களில் நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால் அவர்கள் இடையிலான கலந்துரையாடல் சுமுகமானதாகவும் அனுரவுக்கு தெற்கில் சிங்கள மக்களிடம் நெருக்கடியை ஏற்படுத்தாத விதத்திலும் அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஒருவேளை சஜித்துடனான விவாதத்தை அனுர ஏற்றுக் கொண்டால் அதில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் இருவரும் ஆழமான கலந்துரையாடல் ஒன்றை நடத்தவேண்டும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. பார்ப்போம் யாருக்கு அந்தத் துணிபு இருக்கின்றது

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## மாணவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹோமாகம ஆதார வைத்தியசாலையை தனியார் பல்கலைக்கழகமொன்றின் பயிற்சிகளுக்குப் பயன்படுத்துவதற்கு ஆளும் தரப்பு எடுத்துள்ள தீர்மானத்தைக் கண்டித்தே மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

சிறீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்த எதிர்ப்புப் பேரணி பல்கலைக்கழகத்திற்கு அருகிலிருந்து விஜேராம சந்தியை வந்தடைந்தது. எனினும், மாணவர்கள் ஹைலெவல் வீதிக்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக பொலிஸார் வீதியை மறித்து நீர்த்தாரைத் தாக்குதலையும் கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சையும் மேற்கொண்டு பேரணியைக் கலைத்தனர்.

இதேவேளை, மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையை தடுத்த பொலிஸார் அவர்களைக் கலைப்பதற்கும் நீர்த்தாரைத் தாரைத் தாக்குதலை நடத்தி, கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசினர்.

விரைவுரையாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து அனுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களும் நேற்று எதிர்ப்புப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். அனுராதபுரம் நகர மத்தியில் இருந்து பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக வந்த மாணவர்கள் வீதியை மறித்தனர்.

அவர்களைக் கலைந்து செல்லுமாறு அறிவித்தல் விடுத்த பொலிஸார் மாணவர்களைக் கலைக்க மீது நீர்த்தாரை தாக்குதலை நடத்தினர்.

## ஆசிரியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறேன்.

மூன்று வருடங்களின் பின்னர் 2024 ஆம் ஆண்டில் 4000 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், நாட்டின் பொருளாதாரம் மேலும் வலுவடையும் பட்சத்தில், அடுத்த வருடமும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேலதிக நிதி ஒதுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற மேல் மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நீங்கள் ஒரு வகுப்பறையை மாத்திரம் பொறுப்பேற்கவில்லை. அந்த வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எதிர்காலத்தைதான் நீங்கள் பொறுப்பேற்கிறீர்கள். 05 வயது முதல் 19 வயது வரை உள்ள மாணவர்கள் உங்களுடன் தான் தமது நேரத்தை செலவிடுகிறார்கள். அதனால்தான் அவர்கள் வீட்டில் இருந்து பெறும் வழிகாட்டுதலைப் போன்றே பாடசாலையிலிருந்து அவர்கள் பெறும் வழிகாட்டுதலும் மிகவும் முக்கியமானது. அந்தப் பொறுப்பை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். மாணவர்களுக்கு பாட அறிவை மட்டும் கொடுக்க வேண்டியதில்லை. இந்த மாணவர் களின் வாழ்க்கையை நீங்கள்தான் வடிவமைக்க வேண்டும்.

இன்று, இணையத்தில் பாட அறிவை பெறலாம். ஆனால் மாணவர்களின் குணாதிசயத்தை கட்டியெழுப்ப இணையத்தால் முடியாது. நம் அனைவரின் வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதில் பெற்றோரிடமிருந்து பெற்ற வழிகாட்டுதலைப் போன்றே ஆசிரியர்களின் வழிகாட்டுதல் மிகவும் முக்கியமானது. அதனால்தான் ஆசிரியர் தொழில் உயர்தொழிலாகக் கருதப்படுகிறது. அந்த மரியாதையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆசிரியர்களாகிய உங்களது அறிவு மிகவும் முக்கியமானது. இன்று நாளுக்கு நாள் அறிவைப் புதுப்பித்துக்கொள்ளும் ஒரு சமூகம் உள்ளது. எனவே, கடந்த காலங்களில் பாட அறிவை அதிகரிக்காமல் ஆசிரியர்கள் பணியாற்றுவது சாத்தியமாக இருந்த போதிலும், இன்று அவர்களால் அவ்வாறு செய்ய முடியாது. உங்கள் அறிவு இன்னும் 10, 20 ஆண்டுகளில் போதுமானதாக இருக்குமா என்று சிந்தியுங்கள். எனவே, ஆசிரியர்கள் பாட அறிவை மேம்படுத்தஎப்போதும் பாடுபட வேண்டும்.

இன்று 2300 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படுகிறது. மேலும் 700 நியமனங்கள் வழங்கப்பட உள்ளன. வெற்றிடங்களுக்கு ஏற்ப மேலும் 1000 ஆசிரியர்களை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த வருடத்தில் சுமார் 4000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே இந்த நியமனங்களை வழங்க முடிந்துள்ளது. பொருளாதார வீழ்ச்சி மற்றும் கோவிட் தொற்றுநோய் காரணமாக இந்த நியமனங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் மறைப்பெறுமானத்தை எட்டியது. ஆனால் அரசாங்கம் மேற்கொண்ட சரியான பொருளாதார முகாமைத்துவத்தினால் ரூபாயின் பெறுமதி இன்று அதிகரித்துள்ளது. அதன்படி, பொருளாதாரம் வலுப்பெற்றுள்ளது. எனவே, இன்று இந்த நியமனங்களை வழங்குவதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

கடந்த ஆண்டு டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி 370 ஆக இருந்தது. இன்று டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 300 ஆக உள்ளது, எதிர்காலத்தில் அதை 280 ரூபாவாகக் குறைக்க எதிர்பார்க்கிறோம். அப்போது அரசாங்க செயற்பாடுகளுக்கான பணத்தைத் தேட வேண்டியுள்ளது. இன்று நாம் கடினமான பாதையில் சென்றாலும் எதிர்காலத்தில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண முடியும். இதன் போது அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க முடிந்தது. அத்துடன், சிங்களத் தமிழ்ப் புத்தாண்டுக் காலத்தில் நெல்லுக்கு சிறந்த விலையை வழங்க முடிந்துள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகாலத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலான பணியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொண்டதன் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெறுவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது. பின்னர் கடன் மறுசீரமைப்பு குறித்தும் ஆராயப்பட்டது. அதனால் தற்போது நாடு சுமூகமான பொருளாதார நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையை விருப்பமின்றியேனும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அந்த நேரத்தில் டொலரின் பெறுமதி 400 ரூபாவிற்கு கிட்டியதாக காணப்பட்டது. ஆனால் இன்றளவில் டொலரின் பெறுமதி 300 ரூபாவை விடவும் குறைந்துள்ளது. அதனால் இறக்குமதிப் பொருட்களுக்கான கொடுப்பனவுகளும் குறைவடைந் திருக்கிறது.

பூச்சியமாகக் குறைந்து போயிருந்த நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு இன்று 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. நிலுவைத் தொகையின் நடப்புக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது. அதன்படி, ரூபாயின் பெறுமதி அதிகரித்திருக்கிறது. பல பொருட்களின் விலை குறைந்துள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக அரச வரவு செலவுத் திட்டத்தின் முதன்மைக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது.

வட்டி விகிதம் குறைந்துள்ளது. 70% ஆக இருந்த பணவீக்கம் 6% ஆக குறைந்துள்ளது. அதனால் பொருட்களின் விலை உயர்வு விகிதமும் குறைந்துள்ளது. அதனால் நாடு பாதகமான நிலையிலிருந்து மீண்டுள்ளது என்றே கூறவேண்டும்.

தற்போதைய புதிய மத்திய வங்கிச் சட்டத்தின்படி, எந்த ஆளும் தரப்பு ஆட்சிக்கு வந்தாலும், பணம் அச்சிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இதன் ஊடாக நிதி நிர்வாகத்தில் ஒழுக்கத்தைப் பேண முடிந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத்திட்டத்தில் கடுகளவு மாற்றம் செய்யப்பட்டாலும் நாடு மீண்டும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்படும். அத்தோடு நாட்டின் எதிர்காலமும் கேள்விக்குரியாகிவிடும்.

நாட்டில் வறுமை அதிகரித் துள்ளதாக பல்வேறு தகவல்கள் வெளியாகினாலும், பொருளாதார வளர்ச்சி மறைபெறுமானம் 08 ஆக பதிவாகிய வங்குரோத்து நாட்டில் வறுமை புதிதல்ல, வறுமை நீங்க நாட்டின் வருமானம் அதிகரித்து பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டியது அவசியமாகும். விவசாயம், தொழில் மற்றும் சேவைத் துறைகளில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும்போது, தனிநபர் வருமானம் அதிகரித்து வறுமை குன்றும்.

சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய திட்டத்தில், கடந்த கால நெருக்கடியின் போது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட வறிய மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வறுமைக்கு ஈடுகொடுக்கும் முகமாகவே, சமூர்த்தி தொகையை விடவும் மூன்று மடங்கு அதிகமான நிவாரணத்தை வழங்கும் அஸ்வெசும சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த நிலுவையில் இருந்த 361 பில்லியன் ரூபாவை செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதோடு, மூன்று மாதங்களுக்குள் புதிய ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவுகளும் முழுமையாக வழங்கப்படும்.

இவ்வாறான நிதி ஒழுக்கத்தை பேணுவதாக சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜூன் மாதத்திற்குள், இருதரப்பு கடன் வழங்குநர்களுடனான இறுதி ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும். அதன் பிறகு, தடைபட்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.' என்றார்.

## கிறிஸ்தவத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாகவே அறிந்து கொண்டிருந்தார் என்ற விடயத்தினை நாம் முழுமையாக நம்பவில்லை.

ஜமத்திரிபால சிறிசேன நீதி நியாயத்தினை வெளிப்படுத்துவதாக இருந்தால் அவர் இத்தனை காலம் கழித்து முன்கூட்டியே அறிந்திருந்த விடயத்தினை கூறவேண்டியதில்லை.

மத்திரிபால சிறிசேனவுக்கு 21 நாட்களுக்கு முன்னதாக தகவல்கள் கிடைத்ததாகவே வைத்துக்கொண்டாலு-ம் 21 நாட்களாக அவர் என்ன செய்தார்? மூன்று வாரங்களுக்கு முன்னதாக அறிந்திருந்ததாக கூறும் அவர் ஏன் அது தொடர்பில் நடவடிக்கைளை முன்னெடுக்கவில்லை.

சரி, தெரிந்த பின்னர்கூட அவர் சி.ஐடி.யினரும், ஆணைக் குழுவினரும் அழைப்பு விடுக்கும் வரையில் அவர் அமைதி காத்தி ருக்க வேண்டியதில்லை. உடன டியாகவே அவர் பகிரங்கமாக தெரிவித்திருக்கலாம் என்றார்.

## விசா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா, ரஷ்யா, சீனா, இந்தோனேஷியா, தாய்லாந்து, ஜப்பான் மற்றும் மலேஷியா ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது .

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் இது அமுலிலிருக்கும் என்றார்.

## எந்தவொரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதத்தில் ஈடுபட தான் தயார். அதேபோல் விவாதம் புரிவதன் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் பெறுமானம் சேர்ப்பதாக அமைய வேண்டும். எதிர்க்கட்சியில் இருக்கும் காலத்தில் விவாதங்களுடன் மாத்திரம் மட்டுப்படாமல் மக்களுக்கும் சேவையாற்ற வேண்டும் - என்றார்.

எந்த விவாதத்துக்கும் தான் தயாராக இருப்பது போலவே நாட்டுக்கு சேவை செய்ய தன்னோடு போட்டிக்கு வருமாறு எந்தக் கட்சிக்கும் சவால் விடுப்பதாகவும், விவாதங்களை நடத்துவதற்குப் போலவே நாட்டிற்கு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் தயார் என்றார்.

## இரு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸில் ராஜபக்சவுக்கு முதலில் பொதுத்தேர்தலை நடத்தினால் கட்சியை தக்கவைத்துக்கொள்ளலாம். அரசியல் எதிர்காலத்தினையும் அளவீடு செய்து கொள்ளமுடியும். ஆகவே அவர் பொதுத்தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு அழுத்தங்களை வழங்குகின்றார்.

இந்த இரண்டு பிரச்சினை களையும் தீர்க்கும் வகையில் ஜனாதிபதி தேர்தலையும், பொதுத்தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்துவதற்கு ஆளும் தரப்புக்குள் ஆயத்தப்பணிகள் தீவிரமான முன்னெடுக்கப்படுவதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக் கின்றன.

ஜனாதிபதி தேர்தலையும், பொதுத்தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்துவதற்கு சட்டத்தில் பிரச்சினைகள் இல்லை. ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படும் அதே தினத்தில் பாராளுமன்றத்தினை ஜனாதிபதி கலைப்பாராக இருந்தால் இரண்டு தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்த முடியும் என்றார்

## ஒரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழு இரண்டு தேர்தல்களையும் கையாள்வதற்கு தயாராக இருக்கின்றதாக அறிவிக்க வேண்டும். அந்த விடயத்தில் தான் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இரண்டு தேர்தல்களையும் இந்த ஆண்டுகள் நடத்துவதற்கே எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் அனைவரும் ஒத்துழைத்தால் நேரத்தினையும், செலவையும் கட்டுப்படுத்தி நாம் இரண்டு தேர்தல்களையும் ஒன்றாக முகங்கொடுக்கலாம் என்றார்.



# நாட்டின் எதிர்காலத் தலைவர்களை விளையாட்டின் மூலம் உருவாக்கலாம்

## ஏ.கே அமீர் தெரிவிப்பு




(எம்.எப்.றிபாஸ்)

விளையாட்டின் மூலம் இளைஞர்களின் தலைமைத்துவ பண்புகள் அதிகரித்து காணப்படுவதுடன் எதிர்காலத்தில் சமூகத்தில் பெரும் தலைவர்கள் உருவாகுவார்கள் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ.கே அமீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அந் நூர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பாடசாலையின் அதிபர் அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அமீர் பாடசாலைகள் கல்வியோடு, விளையாட்டையும் சமாந்திரமாக கொண்டு செல்ல வேண்டும். தலைநகரிலுள்ள அதிகமான பாடசாலைகள் விளையாட்டுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன

கல்வியையும் விளையாட்டையும் சிறப்பாக பெற்றவர்கள் தொழில் வாய்ப்போடு சமூக அங்கீகாரத்தையும் இலகுவாக பெற்று வருகின்றனர்.

ஒரு விளையாட்டு வீரன் உடல் ஆரோக்கியத்தைதாண்டி சமூக தொடர்பாடலை அதிகமாக கொண்டுள்ளான். உலகத்தில் விளையாட்டு வீரனுக்குள்ள அங்கீகாரம் வேறு எந்த துறைகளுக்கும் பெரிதாக இல்லை.

இப்பாடசாலை தொடர்ச்சியாக விளையாட்டு போட்டிகளை நடத்த வேண்டும். அதற்காக எதிர்காலத்தில் என்னால் முடியுமான உதவிகளை வழங்கவுள்ளேன். பாடசாலையின் அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ஊர்பிரமுகர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் பங்கு பற்றுதலுடன் சிறப்பான முறையில் இடம்பெறுவதையிட்டு சந்தோசமடைகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# எரிவாயு சிலிண்டர் விலைகள்; கடைகளில் குறையவேயில்லை

## நுகர்வோர் விசனம்

(பாறுக் ஷிஹான்)

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலைகள் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இதன்படி 12.5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 135 ரூபாவால் குறைக்கப்பட்டு 4115 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தில் தற்போது 12.5 கிலோ எடையுள்ள லிட்ரோ சமை



யல் எரிவாயு 4500 ரூபாவிற்கு வர்த்தகர்கள் தான்தோன்றித்தனமாக நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர்.

அத்துடன் மாவட்டத்தில் குறித்த நிர்ணயிக்கப்பட்ட விலையை விட மேலதிகமாக பணத்தை வர்த்தகர்கள் நுகர்வோரிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றனர் எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த செயற்பாட்டை நுகர்வோர் அதிகார



சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எரிவாயு சிலிண்டர் விலை தற்போது குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன்படி மாவட்டந்தோறும் விலைபட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி லிட்ரோ சமையல் எரிவாயு புதிய விலை தொடர்பில் லிட்ரோ எரிவாயு நிறுவனம் பின்வருமாறு அறிவித்துள்ளது.

இதன்படி 12.5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 135 ரூபாவினால் குறைக்கப்பட்டு 4115 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

இதேவேளைஇ 5 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 55 ரூபாவினால் குறைக்கப்பட்டு 1652 ரூபாவுக்கும் -

2.3 கிலோ எடையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 23 ரூபாவினால் குறைக்கப்பட்டு 772 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் லிட்ரோ சமையல் எரிவாயுவின் புதிய விலை பின்வருமாறு

12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை-4435.79 /-

05 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை -1842.94/-

2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை - 951/-

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் விலைச்சூத்திரத்திற்கு ஏற்ப இந்த விலை குறைப்பு அமுலுக்கு வந்துள்ளதாக அதன் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை மற்றுமொரு லாஃப்ஸ் எரிவாயு நிறுவனமும் சமையல் எரிவாயு விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்படி இதற்கமைய 12.5 கிலோ கிராம் எடைக்கொண்ட சமையல் எரிவாயுவின் விலையை 625 ரூபாவினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 12.5 கிலோ கிராம் எடைக்கொண்ட சமையல் எரிவாயுவின் புதிய விலை 4,115 ரூபாவாக குறைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

அதற்கமைய மேலும் ஐந்து கிலோ கிராம் எடைகொண்ட சமையல் எரிவாயுவின் விலையை 248 ரூபாவால் குறைக்கப்பட்டு 1652 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சந்தை எரிவாயு விலை மற்றும் ரூபாயின் ஸ்திரத்தன்மையைக் கருத்தில் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச விலைச் சலுகைகளை வழங்க தமது நிறுவனம் எதிர்பார்த்துள்ளதாகவும் மாவட்டங்களுக்கு ஏற்ப விலை மாற்றங்கள் பற்றிய கூடுதல் விவரங்களை அறிய லாஃப்ஸ் எரிவாயு வாடிக்கையாளர் சேவை எண் 1345 ஐ அழைத்து பொதுமக்கள் தெளிவைப் பெற முடியும் என குறிப்பிட்டுள்ளது.

மேலும் கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருது, காரைதீவு, பாண்டிருப்பு, பெரிய நீலாவணை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, உள்ளிட்ட பகுதிகளில் விநியோகிக்கப்படுகின்ற எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை தான்தோன்றித்தனமாக வர்த்தகர்கள் நிர்ணயித்து அதிகளவான விலையில் விற்பனை செய்வதாகவும் எனவே நுகர்வோர் அதிகார சபை இவ்விடயம் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# பொலிஸாரின் கடமைக்கு இடையூறு: கைதான கான்ஸ்டபிள் பணி நீக்கம்

பொலிஸாரின் கடைமைநேரத்தில் இரவுவிடுதிக்கு அருகில் குடிபோதையில் யுக்திய நடவடிக்கையிலிருந்த பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கான்ஸ்டபிள் நுகேகொடை நீதிமன்றின் நீதிவான் ஒருவரின் தனிப்பட்ட பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டு குறித்த இரவு விடுதிக்கு அனுப்பப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர் .

மிரிஹானபொலிஸ்நிலையத்தில் கடமையாற்றும் இந்த கான்ஸ்டபிள் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி இரவு விடுதிக்கு நீதிவானின் பாதுகாப்பிற்காகச் செல்வதாகக் கடிதம் வழங்கியிருந்தார் எனவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இந்த கான்ஸ்டபிளுடன் மற்றுமொரு கான்ஸ்டபிளும் கொள்ளுப்பிட்டியில் உள்ள இரவு விடுதிக்கு அருகில் மதுபோதையில் அநாகரீகமாக நடந்து கொண்ட போது யுக்திய நடவடிக்கை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இரண்டு கான்ஸ்டபிள்களில் ஒருவர் கொழும்பு குற்றப்பிரிவில் பணிபுரிபவர் என்பதுடன் இந்த விடயம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பைனா விளையாட்டுக் கழகத்தின் இப்தார் அட்டாளைச்சேனையில்



(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக்



கழகம் ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நிகழ்வு கழகத்தின் தலைவர் ஜே. றுஜிகான் தலைமையில் அட்டாளைச்சேனை நிலாமியா வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம்.சபீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் ஆலோசகர் உப பொலிஸ் பரிசோதகர் யூ.எல்.ஆப்தின், திடீர் மரணவிசாரணைஅதிகாரி எஸ்.எம்.றுனைஸ், முகாமையாளர் எஸ்.சபீர் அலி, அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக் கழக செயலாளர் ஏ.ஜி.இக்ராம், பொருளாளர் ஏ.பி.முபீன், உபதலைவர் ஏ.கே.அஜ்வத்,



உட்பட கழக வீரர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

# மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலை பணிப்பாளராகினார் வைத்தியர் ஹனீபா

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிய நிலையில், வைத்திய நிர்வாக சேவை பதவியுயர்வு மற்றும் இடமாற்ற கட்டளையின் பிரகாரம் வைத்தியர் அஸாத் எம் ஹனிபா சிரேஷ்ட தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைவாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரான வைத்தியர் அஸாத் எம் ஹனீபா நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீனிடமிருந்து விடுவிப்பு கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

வைத்தியர் அஸாத் எம் ஹனிபா சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி, தரமுயர்த்தல் மற்றும் அதன் வளர்ச்சிப்பாதைக்கு ஆற்றிய அளப்பெரும் சேவைகளை நினைவுகூர்ந்து பாராட்டி பேசிய பிராந்திய பணிப்பாளர் மற்றும் பிரிவுத்தலைவர்கள் தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அஸாத் எம் ஹனிபா அதிக தேசிய விருதுகளைப் பெற்று கல்முனைப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பெயரை புகழ்பூக்கச் செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீவிர கவனம் அவசியம்

அரசுத் தலைவர் தேர்தலுக்கு இன்னும் அதிகபட்சம் 6 மாதங்களே இருக்கின்றபோதும் தமிழ் மக்கள் தரப்பில் அது குறித்த கலந்துரையாடல்கள் தீவிரம் பெற்றிருப்பதைக் காணமுடியவில்லை. அரசியல் கட்சிகள் சிலபல யோசனைகளை முன்வைத்தாலும்கூட மக்கள் மத்தியில் தமது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் இந்த முக்கிய விடயம் குறித்து இதுவரை காத்திரமான கலந்துரையாடல்களுக்கான வழிகளைக் காணவில்லை. கடைசியில் பார்த்துக்கொள்ளலாம் என்கிற வகையில் இருந்துவிட்டு, கடைசியில் அவசர அவசரமாக ஒரு முடிவுக்குச் செல்வதைவிட இப்போதே விரிவான ஆழமான கலந்துரையாடல்கள் நடத்தப்படுவதும் அது மக்கள் மத்தியில் தீவிரமாகப் பரப்புரை செய்யப்படுவதும் அவசியம்.

அரசுத் தலைவர் தேர்தலை முற்றாகப் புறக்கணிப்பது, தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழர்களின் விருப்பம் தொடர்பாக உலகிற்கு மீண்டும் ஒருமுறை மக்களாணையைக் காட்டுவது, இருக்கிறவர்களில் யாராவது ஒரு வேட்பாளரை ஆதரிப்பது ஆகிய தெரிவுகள்தான் தமிழ் மக்கள் முன் இருக்கின்றன. இவற்றில் முதல் இரு வழிமுறைகள் குறித்தும் ஒரு கொள்கை மட்டக் கதையாடல்கள் நிகழ்கின்றன, ஆனால் அவை நடைமுறைச் சாத்தியமானவைதானான எனபது குறித்த பலமான கேள்வி உண்டு.

தேர்தலைப் புறக்கணிக்கும் தெரிவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கின்றது. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் தமிழர்களின் ஆணையை உலகிற்குச் சொல்லமுடியும் என்பது அந்தக் கட்சியின் கருத்து. புறக்கணிப்பு விடுதலைப் புலிகளின் காலத்தில் சாத்தியமானது, ஆனால் இப்போது அப்படிப்பட்ட ஒரு முழுமையான புறக்கணிப்புச் சாத்தியமானதுதானா என்கிற பலத்த சந்தேகம் கிளப்பப்படுகின்றது. ஏற்கனவே தெற்கு அரசியல் கட்சிகளும் அவற்றுக்கு ஆதரவான தமிழ்க் கட்சிகளும் வடக்கு கிழக்கில் கணிசமான வாக்கு வங்கியை ஏற்படுத்தி வைத்திருக்கும் நிலையிலும் தமிழ் மக்களைக் கட்டுக்கோப்போடு– வழிப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த தலைமை ஒன்று இல்லாத நிலையில் புறக்கணிப்பு எந்தளவிற்குச் சாத்தியமானது என்கிற கேள்வி நியாயமானதே.

அதேபோன்ற கேள்விகளே பொது வேட்பாளர் விடயத்திலும் முன்வைக்கப்படுகின்றன. பொது வேட்பாளர் ஒருவரை நோக்கி தமிழ் மக்களை வழிப்படுத்த முடியுமா? பொது வேட்பாளரை நிறுத்தினாலும்கூட தமிழ் மக்களின் இரண்டாவது தெரிவாக சிங்களவர் ஒருவருக்கு வாக்களிக்கவேண்டியிருக்கும் நிலையில் அந்த நபர் யார்? ஒருங்கிணைந்த தமிழ்த் தலைமை ஒன்று இல்லாத நிலையில் தமிழர்கள் பொது வேட்பாளர் ஒருவரை ஏற்றுக்கொள்வார்களா? அந்தப் பொது வேட்பாளர் யார் என்று பல கேள்விகள் பதிலில்லாமலே இருக்கின்றன. இவை அனைத்துக்கும் விளக்கமளித்து, மக்களைத் தெளிவுபடுத்தி அவர்களைப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகத் திருப்புவதற்கு நீண்ட காலம் தேவை. அதற்கான தயார்ப்படுத்தல்கள் எதும் இதுவரையில் தொடங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பான கருத்துக்கள் முகிழ்நிலையில் மட்டுமே இருக்கின்றன.

தேர்தல் களத்தில் நிற்கும் முன்னணி வேட்பாளர் விடயத்தில் யாரை ஆதரிப்பது என்கிற கலந்துரையாடலும் இன்னும் தொடங்கப்படவில்லை. தேர்தல் அணுகுமுறைக்கான தெரிவு எது என்பதை முடிவு செய்யாமல் யாரை ஆதரிப்பது என்பதை எப்படி முடிவு செய்ய முடியும்? எனவே எதுவாக இருந்தாலும் தமிழ் அரசியல் தலைமைகள் விரைவில் இது விடயத்தில் காலத்தைத் தள்ளிப் போடாமல் தீவிரமான கலந்துரையாடல்களை இப்போதே தொடங்குவது முக்கியம்.

# தேர்தல் எல்லை வரை செல்லுமா கச்சதீவு பிரச்சினை?

**- டி.ராமகிருஷ்ணன்**

கச்சத்தீவு சர்ச்சை கடந்த சில நாட்களாக இந்திய தேசிய, மாநிலத் தலைவர்கள் அனைவரும் கையில் எடுத்திருக்கும் பேசுபொருள் ஆகியிருக்கிறது. இது




நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற விவாதங்களும் எழுந்துள்ளன.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் இருந்து வெறும் 14 நாட்டிக்கல் மைல் (சுமார் 25 கிமீ) தொலைவில்தான் இருக்கிறது கச்சத்தீவு. இது தொடர்பாக இந்தியா – இலங்கை இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகி 50 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில்கூட இந்தச் சர்ச்சை ஓய்ந்தபாடில்லை. இதுவரை அவ்வப்போது பேசப்பட்ட இந்த விவகாரம், மார்ச் 31 ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மோடி பகிர்ந்த ட்வீட் மூலம் முக்கிய விவாதப் பொருளாகியுள்ளது.

அன்று இந்தியப் பிரதமர் தனது எக்ஸ் பக்கத்தில், "யாரைப் பற்றியும் கவலைப்படாமல் கச்சத்தீவை இலங்கைக்கு காங்கிரஸ் தாரைவார்த்திருப்பது ஆர்டிஐ மூலம் பெறப்பட்ட புதிய தகவல்களின் மூலம் அம்பலமாகி உள்ளது. இந்தப் புதிய தகவல்கள் ஒவ்வொரு இந்தியரையும் ஆத்திரமடையச் செய்துள்ளது. காங்கிரஸை ஒருபோதும் நம்பக்கூடாது என்பதை மக்களின் மனதில் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. கடந்த 75 ஆண்டுகளாக இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டை காங்கிரஸ் பலவீனப்படுத்தி வருகிறது. நாட்டின் நலன்களை அந்த கட்சி முற்றிலுமாகப் புறக்கணித்து வருகிறது" எனப் பதிவிட்டிருந்தார்.

இதுபோதாதா என்பதுபோல் மத்திய அமைச்சர்கள் முதல் மாநில பாஜகவினர் வரை பலரும் அதனை வைத்துக் கருத்துச் சொல்ல, அதற்கு தமிழகத்தில் திமுக, தமிழக காங்கிரஸ் குழு தொடங்கி, டெல்லி காங்கிரஸ் மேலிடம் வரை பதிலடி தரவும், ஒரு கட்டத்தில் இந்திய அயலுறவுத்துறை அமைச்சரே அதற்கு விளக்கம் அளிக்கும் நிலை ஏற்பட்டது. இப்போது அதையும் சேர்த்துக் கொண்டு விவாதத்தை இன்னும் வலுவாக கட்டமைத்துள்ளன அரசியல் கட்சிகள். இப்படியாக தொடர்ந்து கொண்டிருக்கிறது கச்சத்தீவு சர்ச்சை.

ஆனால், இது எவ்வளவு தூரம் தேர்தலுக்கான விவாதப் பொருளாக உருவெடுத்து நீடிக்கும் என்பது சந்தேகத்துக்கு உரியதாகவே இருக்கிறது. கச்சத்தீவு 1974இ-ல் இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் 1977இல் மக்களவைத் தேர்தல் நடந்தது. அதனைத் தொடர்ந்து, இதுவரை நடந்த 12 தேர்தல்களில் 1998 மற்றும் 2014 என இரண்டு முறை மட்டுமே திமுக மற்றும் காங்கிரஸ் ஆதரவு இல்லாத வேட்பாளர்களை ராமநாதபுரம் தொகுதி பெற்றுள்ளது. இப்போது கச்சத்தீவு விவகாரத்தில் பாஜக வசைபாடுவதும் காங்கிரஸ், திமுக ஆகிய இந்த இரு கட்சிகளைத்தான்.

1974இ-ல் காங்கிரஸ் மத்தியில் ஆட்சியில் இருந்தது. தமிழகத்தில் திமுக ஆட்சி நடந்தது. அதன் பின்னர் ஒவ்வொரு தேர்தலிலும் ராமநாதபுரம் தொகுதியின் வெற்றியாளர்களுக்கு திமுக அல்லது காங்கிரஸின் முழு ஆதரவு இருந்து வந்துள்ளது. 2019-இல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ராமநாதபுரம் தொகுதியில் வெற்றி கண்டது. இந்த முறையும் திமுக – காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெற்றுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் வேட்பாளர் அந்த இரு கட்சிகளின் முழு ஆதரவோடு அங்கே களம் காண்கிறார். இந்தத் தேர்தல் முடிவு புள்ளி விவரங்களை அலசினாலே கூட கச்சத்தீவு விவகாரத்துக்கும், தேர்தல் அரசியலுக்கும் தொடர்பில்லை எனக் கூறலாம்..

இருப்பினும், அதிமுக மூத்த தலைவரான ஏ.அன்வர் ராஜா (2014- - 19 அதிமுக எம்.பி), இப்போதைய சூழலைப் பார்க்கும்போது ராமநாதபுரம் தொகுதியில் அதிமுகவுக்கு ஆதரவு கூடும் எனக் கணிக்கிறார். "1974இ-ல் கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டபோது மத்தியில் காங்கிரஸும், மாநிலத்தில் திமுகவும் ஆட்சியில் இருந்தன. இப்போது 10 ஆண்டுகள் மத்தியில் ஆட்சியில் இருந்த பாஜகவும் கச்சத்தீவு பிரச்சினையில் எதுவும் செய்யவில்லை. அதிமுக முன்னாள் பொதுச் செயலாளரும், தமிழக முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா மட்டும்தான் கச்சத்தீவு மீட்பில் உண்மையான சட்டப் போராட்டத்தை முன்னெடுத்தார். அதனால், இப்போதைய சூழலைப் பார்க்கும்போது ராமநாதபுரம் தொகுதியில் அதிமுகவுக்கு ஆதரவு கூடும்" என்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் குழு துணைத் தலைவர் ஏ.கோப்பண்ணா கூறுகையில், "கச்சத்தீவு விவகாரம் எப்போதுமே தேர்தல் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தியதில்லை. இந்த முறையும் அதில் மாற்றமேதும் இருக்காது. மாநில மக்கள் இந்த விவகாரத்தில் பிரதமர் மோடியின் வார்த்தைகளை நம்பமாட்டார்கள். தேர்தல் ஆதாயத்துக்காக அவர் இதனைப் பேசுகிறார் என்றும் மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மேலும், கச்சத்தீவுக்கும் மீன்படி விவகாரத்துக்கும் தொடர்பில்லை. ஏனெனில் கடல்வளத்தைப் பொறுத்தவரை நம்மைவிட அதிக வளம் கொண்டதாகவே இலங்கை இருக்கிறது" என்று கூறியுள்ளார்.

பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரான சி.ஆர்.கேசவன் கூறுகையில், "கச்சத்தீவு விவகாரம் திமுக - காங்கிரஸ் கூட்டு துரோகத்தை அம்பலப்படுத்தியுள்ளது. கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டபோது அந்த இரு கட்சிகள்தானே ஆட்சியில் இருந்தன. கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டது சகுனியின் சூதாட்டம் போன்றது. இந்திய நலனில் முக்கியமான ஒன்றை சூதாட்டத்தில் இழந்ததுபோல் இழந்தனர்" எனச் சாடியுள்ளார்.




ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் 6 முறை காங்கிரஸும், 4 முறை அதிமுகவும், 3 முறை திமுகவும், ஃபார்வர்ட் பிளாக், சுயேச்சை வேட்பாளர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலா ஒரு முறையும் வெற்றி பெற்றுள்ளனர். இந்தத் தடவையும் அதில் மாற்றம் வருவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவுதான் என்கிறார்கள்.

**நன்றி: இந்து தமிழ் திசை**

# ஊர்வலம் ஊர்வலமாக வந்து வலுச்சேர்க்கும் பொதுமக்கள்

## கல்முனை தமிழர் போராட்டம் தீவிரமடைகிறது













(வி.ரி.சகாதேவராஜா)

ஊர்வலம் ஊர்வலமாக பொதுமக்கள் வந்து போராட்டத்தில் பங்கேற்கின்றனர். இதனால் கல்முனை தமிழர் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

நேற்று (புதன்கிழமை) பத்தாவது நாளாக அப் போராட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றிலில் நடைபெற்றது.

சுட்டெரிக்கும் வெயிலில் நடைபவனியாக வந்துபெருமளவானபொதுமக்கள்பங்கேற்பது தொடர்கிறது.

சுட்டெரிக்கும் வெயிலிலும் கொதிக்கும் தார் வீதியில் தமது யதார்த்தங்கள் தமக்கு இழைக்கப்படும்அநீதிகள்பற்றியகோரிக்கைகள் தாங்கிய பதாதைகளுடன் நடைபவனியாக சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் வந்து கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் முன்பாகஅமர்ந்திருந்துமக்கள்போராட்டத்தில் கலந்துகொண்டமை ஏனைய மக்களையும் உணர்ச்சி வசப்படுத்தியது.

நேற்றுமுன்தினம் 9 ஆவது நாள் போராட்டத்திற்கு பாண்டிருப்பு பொதுமக்கள் பெரும் ஆதரவு நல்கினர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 150 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் 150 விவசாயிகளுக்கு நீர் பம்பிகள் மற்றும் கிருமி நாசினி தெளிப்பான் போன்ற விவசாய உபகரணங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர்



ஐ.கே.ஜி. முத்துபண்டா உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.(05)



# ஐயன்கன்குளம் பிரதேசத்தில் விவசாயிகள் போராட்டம்

## மேலதிக விதைப்புத் தண்ட அறவீட்டை நிறுத்தக் கோரி



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கமநல சேவைகள் நிலயப்பிரிவுக்குட்பட்ட ஐயன்கன்குளம் பிரதேத்தைச் சேர்ந்த விவசாயிகள் தமக்கான



மேலதிக விதைப்பு தண்டத்தை அறவீடு செய்வதை நிறுத்துமாறும் உரிய பிரதேச கமக்கார அமைப்பை புனரமைக்குமாறும் கோரி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.



முல்லைத்தீவு வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தின்கீழுள்ள ஐயன்கன்குளம் குளத்தின் கீழ் கடந்த 2023 சிறுபோக நெற் செய்கையின் போது விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக செய்கைக்கான தண்ட அறவீட்டை நிறுத்துமாறும் அல்லது கால அவகாசம் வழங்குமாறு கோரியும் குறித்த பிரதேச கமக்கார அமைப்பை புனரமைக்குமாறு கோரியும் திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு துணுக்காய் கமநல சேவை நிலையம் முன்பாக குறித்த போரட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ந்து விவசாயிகள் தமது கோரிக்கை



அடங்கிய மகஜரை துணுக்காய் கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.வசந்தனிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

இதனையடுத்து துனுக்காய் பிரதேச செயலகத்திற்கு சென்று தமது கோரிக்கை அடங்கிய மகஜரை துனுக்காய் பிரதேச செயலாளர் இ.றமேஷிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட பிரதேச செயலாளர் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அனைவருடனும் கலந்துரையாடி ஒரு வார காலத்தில் உரிய பதில் ஒன்றை வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைய நாளைய தினம் (இன்று) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்தில் முன்னிலையாகவேண்டிய அவசியமில்லை எனவும் அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலத்திற்கமைவாக, நீதிமன்றத்தில் நாளை வாக்குமூலம் வழங்குமாறு, மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது.

## கொழும்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டு 33 ஆண்டுகள் வரை சிறையிலிருந்தவர்கள் அந்த நாட்டு உச்ச நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டதை அடுத்து கடந்த ஒன்றரை ஆண்டுகளாக திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தன் கடந்த மாதம் உயிரிழந்ததை அடுத்து தம்மை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு நகர்த்தல் பத்திரம் ஊடாக நீதிமன்றத்தினை அவர்கள் கோரினார்கள். எனினும் அவர்களுக்கு உரியவாறான கடவுச்சீட்டு இல்லாததன் காரணமாகவும் அவர்கள் இலங்கையர்கள் என்பதாலும் அவர்களை இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அனுமதிப்பதில் நெருக்கடியான நிலைமைகள் காணப்பட்டன.

இதனையடுத்து சென்னையில் இலங்கை துணை உயஆணையகம் அவர்களுக்கான கடவுச்சீட்டை வழங்கிய நிலையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திருச்சி சிறப்பு முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 11.15 மணிக்கு சென்னைக்கு பொலிஸார் வாகனம் மூலம் அழைத்து வரப்பட்டனர்.

இதன்படி நேற்று முற்பகல் 10 மணியளவில் சென்னை விமான நிலையத்திலிருந்து அவர்கள் இலங்கை நோக்கி பயணித்தனர். மூவரும் காலை 11.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்களுடன் சட்டத்தரணி புகழேந்தி பாண்டியனும் வருகை தந்திருந்தார். இந்நிலையில் கட்டுநாயக்க விமான நிலையில் அவர்கள் குடிவரவு உட்பிரவேசிப்பதற்கு அனுமதி அளித்தபோதும், அதன்பின்னர் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அவர்களை தடுத்து நிறுத்தி வாக்குமூலம் பெற்றனர்.

ஐந்தரை மணிநேர வாக்குமூலப் பதிவின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். மூவரும் தாயகத்துக்கு வருகை தந்துள்ளனர். விமான நிலையில் இவர்களை வரவேற்பதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஊடகப் பேச்சாளர் கனரத்தினம் சுகாஸ் ஆகியோரும் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சிவில் அமைப்பினரும் வருகை வந்திருந்ததோடு உறவினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட கொள்கைத் திட்டம், அதனை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் காமினி சேனாநாயக்கவினால் ஜனாதிபதியிடம் இதன்போது கையளிக்கப்பட்டது.

இந்த கொள்கை திட்டம் உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல், நிலைத்தன்மை மற்றும் ஈடுகொடுக்கும் தன்மையை மேம்படுத்துதல், உள்ளக வளர்ச்சி மற்றும் கிராமிய மேம்பாடு, உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை பலப்படுத்தல், சந்தை பிரவேசம் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துதல், நிறுவன மற்றும் நிர்வாகத் செயற்பாடுகளை பலப்படுத்தல், புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோரை வலுவூட்டுதல் உள்ளிட்ட விடயங்களை உள்வாங்கித் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 25 மாவட்டங்களின் 26 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து 26 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு அவற்றுக்கான முன்னோடித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நிதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது.

வாழ்வாதார விவசாயத்திலிருந்து விடுபட்டு, பாரிய மற்றும் சிறிய அளவிலான தொழில் முயற்சிகளை உள்ளடக்கிய நவீன விவசாயத்தை நோக்கி நகர வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, விவசாய ஏற்றுமதித்துறையானது தேசியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கை வகிப்பதாகவும், நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் போது விவசாயத் துறையில் விரைவான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில், நெல் மற்றும் ஏனைய விவசாய பயிர்கள், பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட விவசாயத்தின் பலதரப்பட்ட அம்சங்களையும் நவீனமயப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பயிர்ச்செய்கைக்காக 500,000 ஏக்கர் நிலத்தை விடுவித்தல் மற்றும் இலங்கையில் உள்ள விவசாயிகளை நவீன விவசாய நுட்பங்களில் ஈடுபடுத்தும் திட்டம் குறித்தும் ஆராயப்பட்டது.

விவசாய மறுசீரமைப்புச் செயற்பாட்டிற்கு தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் ஆதரவைப்பெறுவதற்கான சாத்தியங்கள் குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த ஜனாதிபதி, அரச-தனியார் ஒத்துழைப்புக்களை பலப்படுத்த அரச நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர மறுசீரமைப்புகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

விவசாயப் பொருட்களுக்கு பெறுமதி சேர்த்தல் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் தொடர்பிலும் ஆராயப்பட்டதோடு, செயல்முறைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் தேவையற்ற அரச நிறுவனங்களை இரத்துச் செய்தல், தனியார் துறையுடனான ஒத்துழைப்புக்களை பலப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

காலநிலை மாற்றங்களின் போதான, நீர் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அதற்காக நாட்டில் சிறந்த திட்டமொன்றை செயற்படுத்த வேண்டிதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்துடன், விவசாயிகளின் காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு வழங்குதல், விவசாய நவீனமயப்படுத்தலுக்கு அவசியமான நவீன இயந்திரங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் ஊக்குவித்தல் போன்ற சவால்கள் குறித்தும், நவீன விவசாய முயற்சிகளில் ஈடுபட விரும்பும் இளைஞர்களை வலுவூட்டுவது தொடர்பிலான விடயங்கள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினர்.

இதற்காக முழுமையான திட்டத்தை இரண்டு வாரங்களுக்குள் தயாரித்து சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் கலந்துரையாடி அதனை அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அதனை பாராளுமன்றத்தில் சமர்பிக்க எதிர்பார்த்திருப்பதோடு, அதற்கு முன்னாதாக இது தொடர்பில் பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவினால் கண்காணிக்கப்பட வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

விவசாயத்தை நவீனமயப்படுத்தி, விவசாய தொழில்துறையை விரிவுபடுத்தி, நாட்டின் கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்தி வறுமையை ஒழிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சந்ரா ஹேரத், பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் உரிய அரச நிறுவன அதிகாரிகள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.



# கல்முனையில் டியூசன் வகுப்புகளை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தல்!



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் தரம்-01 தொடக்கம் தரம்-10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் ஏப்ரல்-04 முதல் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கல்முனை மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

முஸ்லிம்களின் புனித நோன்பு மற்றும் தமிழ், சிங்கள புது வருடப் பிறப்பு போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகைகளைக் கொண்ட இம்மாதமானது அதிக உஷ்ணம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

இருந்த போதிலும் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பொருத்தமற்ற நேரங்களில் தொடர்ச்சியான வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துவதாக மத அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து எமக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் தரம்-01 தொடக்கம் தரம்-10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் 2024.04.04 ஆம் திகதி தொடக்கம் 2023.04.15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்வதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தல் கடிதத்தின் பிரதிகள் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர், கல்முனை, சாய்ந்தமருது மற்றும் பெரியநீலாவணை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (05)

# பொரலஜ்கமுவவில் ஒருவர் கழுத்தறுத்துப் படுகொலை

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கு அருகில் கழுத்தறுக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளாரெனப் பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைசெய்யப்பட்டவர் மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த இந்திக்கலக்மான் என்ற 38 வயதுடையவராவார்.

இவர் செவ்வாய்க்கிழமை இரவு 9.15 மணியளவில் உயிரிழந்தவர் தனது ஓட்டோவில் கோழி இறைச்சி கொள்வனவு செய்வதற்காகக் குறித்த தேவாலயத்துக்கு அருகில் உள்ள கடையொன்றிற்குச் சென்றிருந்தபோதே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

(05)

# கப்பலில் ஏற்றும்போது கடலில் வீழ்ந்த கார்

## அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சம்பவம்

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல் ஒன்றில் வாகனங்களை ஏற்ற முயற்சித்தபோது கார் ஒன்று கடலில் வீழ்ந்ததில் சாரதி காயமடைந்து அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்றுமதி செய்வதற்காக வைக்கப் பட்டிருந்த பல்வேறு வாகனங்களை நேற்று (புதன்கிழமை) அதிகாலை 2.30 மணியளவில் சர்வதேச துறைமுகத்தில் கப்பலொன்றிற்கு ஏற்ற முயற்சித்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சாரதியின் நிலைமை பாரதூரமாக இல்லை என வைத்தியர்கள் தெரிவித் துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் துறைமுக அதிகாரிகள் எந்தவித கருத்துக்களும் தெரிவிக்கவில்லை. (05)

# யாழ். மத்திய கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை (வெள்ளிக்கிழமை) பி.ப 01.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ். இந்திரகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன் கலந்துகொள்வுள்ளார். (05)

# 'பண்டாரவளை 'பூதயா' கைது போதைப்பொருளும் சிக்கியது

'பண்டாரவளை பூதயா' என்றழைக்கப்படும் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் தியத்தலாவ பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பாதுக்க பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபராவார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 5,100 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர் பண்டாரவளை பொருளாதார மத்திய நிலையத்தில் சிகையலங்கார நிலையம் ஒன்றை இயங்கிச் செல்லும் போர்வையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவர் பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் அறையொன்றை வாடகைக்கு எடுத்து வசித்துவந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 7 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

(05)

# ஏறாவூர் பட்டதாரிகள் சங்க ஒன்றுகூடலும் இப்தாரும்



(தில்சாத் பர்வீஸ்)

ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நிறைவேற்றுக் குழு, செயற்குழு உறுப்பினர்களுடனான உத்தியோகபூர்வ கலந்துரையாடல் மற்றும் புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு வருடாந்த இப்தார் நிகழ்வும் ஏறாவூர் மட்/மமமஃ மாக்கான் மாக்கார் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் மஹ்சூம் செய்யத் அஹமட் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ செய்யித் அலிசாஹிர் மௌலானா கலந்து சிறப்பித்ததோடு விசேட அதிதிகளாக பொலன்னறுவை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜே.எம்.அல் அமீன், ஏறாவூர் நகர சபை முன்னாள் தவிசாளர் அல் ஹாஜ் எம்.எஸ்.எம். நழீம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் அம்ஜத் மௌலானா, மட்/மமமஃ அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் எஸ்.எம்.எம். நவாஸ், ஏறாவூர் நகர இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ.எல். றம்சி மற்றும் தபால் அதிபர் நஸீர், ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் எம்.எல்.செய்யத் அஹமட், ஏறாவூர் சமூக சேவை அபிவிருத்தி அமைப்பின் செயலாளர் மற்றும் உறுப்பினர்கள், டெலிசயன்ஸ் உரிமையாளர், அல் அமீன் புத்தக நிலைய உரிமையாளர் மற்றும் அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், கிழக்கு, வவுனியா,

இலங்கை தென்கிழக்கு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களின் முஸ்லிம் மஜ்லிஸ் பிரதிநிதிகள், ஆலோசனை சபை உறுப்பினர்கள், ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் உப தலைவி ஏ.டபுள்யூ.எப்.அம்னா, செயலாளர் ஜே. நஜாத் அஹமட், கல்வி ஒருங்கிணைப்பாளர் பாத்திமா நுஸ்ரா ஆகியோரும் நிறைவேற்று மற்றும் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் மஹ்சூம் செய்யத் அஹமட் அவர்களால் சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளம்கலை பட்டதாரிகள் சங்கத்தின் எதிர்காலத் திட்டமிடல்கள் தொடர்பில கலந்துரையாடப்பட்டதோடு நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ செய்யத் அலிசாஹிர் மௌலானாவால் படித்த சமூகம்,

கல்வியியலாளர்களால் ஆற்றப்பட வேண்டிய எதிர்கால சமூக இலக்குகள் குறித்த உரையொன்றும் ஆற்றப்பட்டது.

இதன் போது ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் மஹ்சூம் செய்யத் அஹமட்டால் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ அலிசாஹிர் மௌலானாவிடம் மஹஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் உத்தியோகபூர்வ ஒளிபரப்பு பங்காளராக வாய்ஸ் ஒப் ஏறாவூர் மற்றும் ஊடகப் பங்காளராக ஆர்ஜே மீடியா வலையமைப்பு மற்றும் உத்தியோகபூர்வ புகைப்பட பங்காளராக க்ளிக் சோன் பொடோக்ராபி, போன்றோர் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிண்ணியா, மாகமாறு வீதிக்கு காப்பெட் இடும் பணி தாமதம்

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கச்சகொடித்தீவு - நடுவூற்று வீதி காப்பெட் இடும் பணிகள் மிகவும் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன.

நடுவூற்றிலிருந்து மாகாறு வரையான எல்லைகளில் காப்பெட் இடப்பட்டு நிறைவடைந்துள்ளது. அதேவேளை மாகமாறு நீர்த்தாங்கியிலிருந்து கிண்ணியா அலிகார் மகாவித்தியாலயத்தை ஊடறுத்து செல்லும் கச்சகொடித்தீவு பிரதான வீதி வரையான பகுதிகள் இன்னும் காப்பெட் இடப்படாமல் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மழையுடனான காலநிலை நிலவி வந்து காலப்பகுதியிலும் அசௌகரியத்திற்குட்பட்ட அவர்கள் கச்சான் காற்று பருவ நிலை ஆரம்பமாகவுள்ள நிலையில் இவ்வீதி காப்பெட் இடப்படாமல் இழுத்தடிக் கப்படுவதால் இன்னும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர். இதனை விரைவாக அமைப்பதன் ஊடாக மக்களின் அசௌகரியத்தை குறைக்கமுடியும். (05)

# போதை மாத்திரைகளுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

கட்டுநாயக்க பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது போதை மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்டதாக கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 7 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, அதே பிரதேசத்தில் வைத்து 550 போதை மாத்திரைகளுடன் மற்றுமொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் கட்டுநாயக்க மற்றும் சீதுவை உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 19 மற்றும் 42 வயதுடைய இருவராவார்.

மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# முல்லை. சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர் கடமையேற்றார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியர் முத்துக்குமாரசுவாமிசர்மா உமாசங்கர் கடமைகளைப் பொறுப்போற்றார்.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிவந்த குலலிங்கம் அகிலேந்திரன் வவுனியா ஓமந்தை பிரதேசத்தில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த நிலையில் மேற்படி பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

இந்நிலையில் மருத்துவ நிர்வாக துறையில் சிரேஸ்ட தரத்துக்கான பதவி உயர்வுகள் சுகாதார அமைச்சால் அண்மையில் வழங்கப்பட்டதற்கு அமைவாக வைத்தியர் முத்துக்குமாரசுவாமிசர்மா உமாசங்கர் மேற்படி முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று (புதன்கிழமை)



காலை 9.30 மணிக்கு புதிய முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் முத்துக்குமாரசுவாமி உமாசங்கர் கடமைகளையை பொறுப்பேற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# அல்- ஹிலாலில் இப்தார் நிகழ்வு

**கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள் பங்கேற்பு**





(நூருல் ஹுதா உமர்)

கல்வி அமைச்சின் சுற்று நிரூபத்தை அடிப்படையாகக் கொண்டு கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ அல்-ஹிலால் வித்தியாலயத்தில் விசேட இப்தார் நிகழ்வு செவ்வாய்க்கிழமை பாடசாலையின் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.



பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் மத்தியில் சமய விழுமியங்களைப் பேணும் எண்ணப்பாங்கினை ஊக்குவிக்கும் நோக்கில் மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல்நஜிம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், கல்முனை மாநகர கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், அரசஉயர்அதிகாரிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரிகள், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஓய்வுபெற்ற அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், பழைய மாணவர்கள் சங்க பிரதிநிதிகள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நோன்பின் மகத்துவம் தொடர்பான சொற்பொழிஷ்வினை கல்முனைமஹ்மூத்மகளிர்கல்லூரி ஆசிரியர் மௌலவி ஏ. கலீலுர் ரஹ்மான் அவர்கள் நிகழ்த்தினார். சிறப்புரையை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜிம் நிகழ்த்தியதோடு, நன்றி உரையை பாடசாலையின் பிரதி அதிபர் நிகழ்த்தினார். இந்த பாடசாலை அண்மையில் காஸா சிறுவர்களுக்கான ஜனாதிபதி நிதியத்திற்கும்நிதிவழங்கிஇருந்தமை விஷேட அம்சமாகும். (05)



# மூதூர் பாட்டாளிபுர மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(எச் எம் ஹலால்தீன் )

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாட்டாளிபுரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேன்பாட்டை அபிவிருத்தி செய்தல் என்ற நோக்குடன் மாணவர்களுக்கான உடைகள்,



புத்தகப்பைகள், பயன் தரும் மரக்கன்றுகளும் என்பன மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

எம்கடமை அமைப்பின் பணிப்பாளர் இராசமாணிக்கம் ஜீவேந்திரன் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியாட்சகர் நிசங்க கொடமுன,சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துசார, மூதூர் வர்த்தக சங்க தலைவர் என் எச் பஸ்ரி நஜா,கிராம அபிவிருத்தி சங்கத்தினர்,பாட்டாளிபுரம் அறநெறிபாடசாலை ஒருங்கிணைப்பாளர் நகுலேஸ்வரன், ஆசிரியர்கள்.பெற்றார்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொன்டனர்.(05)



# தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்திக்கு ஸ்மார்ட் வகுப்பறை வழங்கிய சஜித்





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நேற்று (புதன்கிழமை) முல்லைதீவு தண்ணீரூற்று முஸ்லிம்மகாவித்தியாலயத்திற்குஸ்மார்ட்வகுப்பறை மற்றும் கண்ணிகள் ஐந்து உள்ளிட்ட பொருள்கள் கையளிக்கப்பட்டது.

(05)

# ஜனாதிபதி தேர்தல் வந்தே தீரும் தவறின் நாடு இருள் மயமாகும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தலை பொறுத்தவரையிலே ஜூலை மாதத்திற்கு பின்னர் தேர்தலுக்கான வேலைப்பாடுகளை செய்ய வேண்டிய கடமை தேர்தல் ஆனையகத்திற்கு உள்ளது.

ஒக்ரோபர் மாதமளவில் தேர்தலை நடத்தியாக வேண்டும். இதைத்தான் எங்கள் அரசமைப்பு சொல்லுகின்றது. அதில் எந்த மாற்றங்களையும் செய்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் முசலி பகுதியில் விவசாயிகளுக்கு இலவச விதைகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி தேர்தல் வந்தே தீரும். அதற்கு முன்னர் ஜனாதிபதி விரும்பினால் நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை வைக்கலாம் அவ்வாறு இல்லைஎன்றால்ஜனாதிபதி தேர்தல் ஒக்ரோபரில் நடந்தே தீரும். இல்லை என்றால் எதிர் காலத்திலே இந்த நாடு இருள் மயமாகிவிடும்.

அதுமட்டுமல்லாமல்உலகநாடுகள் அனைத்தும் எமது நாட்டை உற்று நோக்கிபார்த்து கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரத்தில்வீழ்ந்துஉலகத்திற்கு 50 பில்லியன் அளவில் கடன் செலுத்த வேண்டிய நாடாக இருக்கின்ற எமது நாட்டில் ஜனநாயக ரீதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகின்ற விடயத்தில் எந்த ஒரு கேள்விக்கு உட்படுத்தும் விடயமோ அல்லது நிறுத்தப்படுவதோ அல்லது வேறு சாட்டுக்களை சொல்வதோ முடியாத விஷயமாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்தே கடந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டோம் அதனை தொடர்ந்து தற்போது வரை அதே கூட்டணியுடன் பயணித்து வருகிறோம். ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படுகின்றபோது எமது கட்சியின் உயர்பீடம் தேர்தலில் எந்த வேட்பாளரை தெரிவு செய்வது என்பது தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.(05)

# விருந்துபசாரத்தில் மோதல்; ஒருவர் தாக்கப்பட்டு சாவு

## சந்தேகநபர் கைது

புத்தளம், வணாத்தவில்லு, காட்டுப்புளியங்குளம் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் உயிரிழந்துள்ளார் என வணாத்த வில்லுவ பொலிஸார் தெரிவித்தனர்.

வணாத்தவில்லுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போதே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபருக்கும் சந்தேக நபருக்குமிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கடுமையாக தாக்கப்பட்ட இவர்வைத்தியசாலையில்சேர்க்கப்பட்ட போதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தாக்குதலை மேற்கொண்டார் என சந்தேகிக்கப்படும் நபரை கைது செய்துள்ளதாக வணாத்தவில்லுவ பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# தனியார் பஸ்ஸினை வழிமறித்து வவுனியாவில் தாக்குதல் முயற்சி





வவுனியா சூடுவெந்தபுலவு பகுதியில் செவ்வாய்க்கிழமை மதியம் தனியார் பஸ்ஸினை வழிமறித்து மற்றொரு தனியார் பஸ் சாரதி, நடத்துனர் குறித்த பஸ் நடத்துனர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொண்டமையுடன்அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.

செட்டிக்குளம் வீரபுரம் ஊடாக வவுனியாநோக்கிபயணித்ததனியார் பஸ்ஸினை பாவற்குளத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனர்வழி மறித்து செட்டிக்குளம் தனியார் பஸ்ஸின் நடத்துனர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சி மேற்கொண்டமையுடன் அவருக்கு அச்சுறுத்தலும் விடுத்துள்ளார்.

நேரசூசிபிரச்சினைகாரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருவதுடன் பொலிஸார் இச் சம்பவம்தொடர்பில்விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் பயணிகள்தெரிவித்துள்ளனர்.(05,100)

# கல்முனை கார்மேல் பற்றிமாவில் மாணவ தலைவர்கள் தெரிவு





(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் பெண்கள் பிரிவில் கனிஷ்ட மாணவத்தலைவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கனிஷ்ட மாணவத்தலைவர்களுக்கு சின்னம்



சூட்டும் நிகழ்வும் செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ச.இ.றெஜினோல்ட் எவ்.எஸ்.ஸி. தலைமையில்சிறப்பாகநடைபெற்றது..

பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிரேஸ்டவிரிவுரையாளர்டாக்டர்திருமதி





எஸ்.சதாநாதன் கலந்து சிறப்பித்தார்.

ஏனையஅதிதிகளும்ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.04.2024இல் வெளியிடப்பெற்றது